1993 பிப்ரவரி 12] [பேரவைத் தலைவர்]

கிறபோது அதுபற்றிப் பேசலாம். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதிலுரையில் தன்னுடைய விளக்கத்தினை வழங்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். உட்காருங்கள்.

3. விதி 110-இன்கீழ் சட்ட அமைச்சரின் அறிக்கை.

11—2—1993 அன்று இண்டர்ஸ்டேட் கவுன்சில் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் மொழிக் கொள்கை பற்றித் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-இன்கீழ், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைப் பேரவைக்கு அளிக்க அனுமதி கோரியிருக்கிறார்கள். அதற்கு அனுமதி அளித்திருக்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில உறவுகள் பற்றிய சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட, மாநிலங்களின் துணைக் குழுவின் கூட்டம் (Inter State Council) 11—2—1993 அன்று புதுடில்லியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பிரதிநிதியாக, தமிழக சட்ட அமைச்சர் என்ற வகையிலே, அங்கு நான் பங்கேற்றேன், நேற்றைய தினம் மொழிப் பிரச்சினையில், மும்மொழித் திட்டத்தை தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என்பது, சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளில் ஒன்றாகும். இந்தப் பரிந்துரையைப் பற்றி விவாதம் நடந்த நேரத்தில், பீஹார் முதலமைச்சரும், பஞ்சாப் மாநிலத்தினுடைய முதலமைச்சரும் மும்மொழித் திட்டத்திற்கு ஆதரவாகவும், இந்தியை வளர்க்க வேண்டியதன் அவசியம் பற்றியும் பேசினார்கள். அவர்கள் இருவரும் இந்தி மொழியில் பேசியதை ஒலிபெருக்கிக் கருவியின் மூலம் நான் கேட்டேன். மும்மொழித் திட்டத்தை தமிழ்நாடு ஏற்கவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டிய இடம், இந்தத் துணைக் குழுக் கூட்டம் தான் என்பதால், தமிழக அரசின் மொழிப் பிரச்சினையில், பேரறிஞர் அண்ணா டாக்டர் புரட்சித் தலைவர் ஆகியோருடைய வழியில் நடந்து வரும் ஒப்பற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய மொழிக் கொள்கையையும், இந்தியை மட்டும் தேசிய மொழியாக ஏற்க முடியாது என்பதனையும் அங்கே பேசும்போது நான் திட்டவட்டமாகத் தெரிவித்தேன். உரிய பிரதிநிதித்துவம் வாய்ந்த உயர்மட்ட

(திரு. ஏ. கே. கிருஷ்ணசாமி) [1993 பிப்ரவரி 12

அமைப்பான இந்தக் குழுவின் முன் புரட்சித் தலைவி அரசினுடைய சார்பில் நான் பின்கண்ட கருத்துக்களை வலியுறுத்தினேன் :

1. தமிழ்நாட்டில் 1968 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறிய நாள் தொடங்கி தாய் மொழி தமிழ்; அடுத்தது ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கைதான் தமிழ் நாட்டிலே நடைமுறையில் இருக்கிறது;

முற்பகல் 11-00

2. இந்தியாவில் தேசிய மொழி அனைத்தும் ஆட்சி மொழி ஆகும் வரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பது தான் தமிழக மக்களின், தமிழ்நாடு அரசின் உயிர்மூச்சுக் கொள்கையாகும்.

3. இந்தியாவில் ஒட்டுமொத்த ஆட்சி மொழியாக ஆகும் தகுதி இந்திக்குத் துளியும் இல்லை என்பதும், மற்ற மொழிகளைப் போல இந்தியும் ஒரு மாநில மொழி என்பதும் தமிழகத்தினுடைய நிலை ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி).

4. இந்தி, ஆங்கிலம், இந்தி அல்லாத பிற மாநில மொழி என்ற மும்மொழிக் கொள்கையானது இந்தியாவில் எந்தப் பகுதியிலும் முழு விஸ்வாசத்துடன் இன்று கடைப்பிடிக்கப் படுவதில்லை. இந்தி பேசும் எந்த மாநிலத்திலும் தமிழோ தெலுங்கோ, கன்னடமோ, வங்காளமோ இந்தி அல்லாத மொழியோ கற்றுக் கொடுக்கப்படுவதும் கிடையாது. மும்மொழித் திட்டத்தை மத்திய அரசோ, இந்தி பேசும் மாநிலங்களோ எந்த வகையிலும் செயல்படுத்துவது இல்லை. மாறாக, இந்தி பேசும் மாநிலங்களில் மத்திய அரசு இந்தி மொழி மட்டும் என்கின்ற ஒரு மொழித் திட்டத்தையே—One Language Formula என்ற முறையிலே நிறைவேற்றி வருகின்றது. இதைநான் ஆதாரங்களுடன் அங்கே விளக்கினேன்.

இந்தி மொழியானது வளம் பெறாத ஒரு மொழி. பல்வகையாகப் பேசப்படும் ஒரு இலக்கணமில்லாத மொழி என்றுதான் இந்தி தேவையில்லை என்பதும் பிற பகுதிகளுடனும், உலக அளவிலும் தொடர்புகொள்ள ஆங்கிலமே போதும் என்பதும் தான் தமிழக அரசின் கொள்கை என்பதனையும் திட்டவட்டமாக தெளிவாக, மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பாக எடுத்துரைத்தேன். மும்மொழித் திட்டம் என்ற பெயரில் இந்தியை மட்டும் திணிக்கும் போக்கினை எதிர்த்து தமிழ்நாடு தொடர்ந்து, பேரறி

1993 பிப்ரவரி 12] *[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]*

ஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இருந்து பேராடி வருகிறது என்பதையும் சுட்டிக்காட்டினேன். குறிப்பாக மும்மொழித் திட்டம் பற்றிய சர்க்காரியா கமிஷன் பரிந்துரையை அன்றே எதிர்த்து டாக்டர் புரட்சித் தலைவர் ஏம்.ஜி.ஆர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இதே சட்ட சபையிலே இதைப் பற்றிய தெளிவான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இருப்பதையும் அந்த மன்றத்திலே சுட்டிக் காட்டினேன். இந்திக்கு மட்டுமே ஆட்சிமொழி அந்தஸ்து அளிக்கும் அரசியல் அமைப்புச் சட்ட விதி திருத்தப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொடர்ந்து வலியுறுத்து வருகின்றார்கள். மேலும் 25 ஆண்டுக் காலமாக இருமொழித் திட்டத்தை தமிழ்நாடு உறுதியாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. எனவே, மும்மொழித் திட்டம்— Three Language Formula — என்ற சர்க்காரியா கமிஷன் பரிந் துரையை அமல் செய்யப்படுவதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஏற்காது; ஏற்காது; ஏற் காது; (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை அந்த அமைப்பில் திட்டவட்டமாகக் கூறியதுடன், கூட்ட நட வடிக்கைக் குறிப்பில் அதைப் பதிவு செய்யுமாறும் கேட்டுக் கொண்டேன். மும்மொழித் திட்டம் என்ற பெயரில் இந்தி அல்லாத பிற மொழிகள் எந்த இந்தி பேசும் மாநிலத் திலும் கற்றுக் கொடுக்கப்படுவதில்லை என்ற கருத்தை தலைமை வகித்த மத்திய உள்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ்.பி. சவான் அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். ஒப்புக்கொண்டு பேசினார்கள். உண்மை இவ்வாறு இருக்க, சர்க்காரியா கமிஷன் பரிந்துரையின்படி மும்மொழித் திட்டத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவது என்ற கருத்து ஒற்றுமை (Consensus) 11-2-1993 அன்று நடந்த உயர்மட்டக்குழுக் கூட்டத்தில் ஏற்பட்டதுபோல இன்றைக்கு மத்திய உள்துறை அமைச்சர் தெரிவித்திருப்பது சரியல்ல. இருமொழிக் கொள்கைக்கு ஆதரவாகவும், மும் மொழித் திட்டத்தை எதிர்த்தும், இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்ற நிலையை ஏற்க முடியாது என்பதையும் மேற்படிக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சார்பில் திட்டவட்ட மாகத் தெரிவித்திருக்கிறேன் என்பதனை இந்த மாமன் றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

4. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம். இருக்கையில் இல்லை.